**தலைப்பு 324 - முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு - 324 முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட:டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டு நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2023 ஆம் ஆண்டிற்கு ரூபா 65,429,000 தொகையான கட்டுநிதியை வேண்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் திணைக்களத்திற்கு ரூபா 56,562,000 கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. திணைக்களம் திட்டமிட்ட கட்டுநிதி பெறுமதியில் 86 சதவீதம் மாத்திரம் திறைசேரியிடமிருந்து திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் உள்ளபடியான செலவினையும் 2023 ஆம் ஆண்டின் பாதீட்டு நிதி ஏற்பாட்டினையும் கருத்தில் கொண்டு ரூபா 65,429,000 கட்டுநிதி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் வருடாந்த நிதி ஏற்பாட்டினை குறைத்தல் மற்றும் செலவுகளைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக எதிர்பார்த்த கட்டுநிதி அளவானது அவசியமற்றதாகும். | தேவைப்பாட்டினை அடையாளங்கண்டு கட்டுநிதியை திட்டமிடுதல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

### 2.2.1 நிதி ஏற்பாட்டினை மாற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 06 மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு விடயங்களின் ரூபா 16,600,000 நிதி ஏற்பாட்டில் 04 சதவீத்திலிருந்து 46 சதவீதம் வரையான வீச்சில் நிதி எற்பாட்டினை குறைத்தலும் 05 செலவு விடயங்களின் ரூபா 1,800,000 மொத்த தொகையான நிதி ஏற்பாட்டிற்கு 34 சதவீத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சில் நிதி ஏற்பாட்டினை அதிகரித்தலும் நி.பி 66 மாற்றங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. | பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்தல், பராமரிப்பு தேவைப்பாடுகள் ஏற்படுதல், மற்றும் அதிக அளவான உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயிற்சி தேவைப்பாட்டிற்கு தகமை பெற்றிருத்தல் என்பவற்றின் காரணமாக தொடக்க பாதீட்டில் செலவுகளை முகாமைத்துவம் செய்தல் சிக்கலாக இருந்ததனால் நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாட்டினை மாற்றிக்கொள்வதன் மூலம் உரிய செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட்டது. | தேவைப்பாட்டினை அடையாளங்கண்டு பாதீட்டு நிதி ஏற்பாட்டினை திட்டமிடுதல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள்,மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு** | | **இணக்கமின்மை** | | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | | |
| (i) | நி.பி 315 | திணைக்களத்தின் சாரதிகளால் பிணைவைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சாரதிகளின் பிணைவைத்தல் நடவடிக்கைகளுக்காக பிணைப் பணத்தை தீர்மானித்ததன் பின்னர் அந்த பிணைவைக்கும் | நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | எடுத்தல் வேண்டும். |
| | (ii) | நி.பி 756 | மீளாய்சவவாண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கை அடுத்து வரும் ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒட்டுமொத்த கைதவிர்ப்பு நடவடிக்கை முடிவடைந்திருக்காததனால் மீளாய்வு அறிக்கை தொடர்பான படிவத்தின் பிரகாரம் 2024 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க முடியாதுள்ளது. கைதவிர்பு நடவடிக்கை முடிவடைந்த உடன் அந்த அறிக்கையை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | -மேற்படி- |
| (ஆ) | 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 7.6 ஆம் பந்தி | | நிதி செயலாற்றல் கூற்றில் திருத்திய பாதீட்டு நிதி ஏற்பாட்டு நிரலுக்கு பாதீட்டு நிதி ஏற்பாட்டிற்கான நி.பி 66 மாற்றங்கள் மற்றும் குறைநிரப்பு நிதி ஏற்பாட்டு செம்மையாக்கல்களின் பின்னரான பெறுமதி ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதத்தின் காரணமாக தொடக்க பாதீட்டு பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளதனால் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமைக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கை 50 அக இருந்ததுடன் அவற்றில் 09 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. வெற்றிடங்களில் 04 பதவிகள் சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளாகும். | திணைக்களத்திற்காக அங்கீகரித்த ஆளணியினர்களின் அளவில் 09 பதவிகள் தற்பொழுது வெற்றிடமாக உள்ளன. விசேடமாக நிறுவனத்தின் செயலாற்றலுக்க சிரேஷ்ட மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையானது தீர்மானமிக்கும் ஆற்றலுள்ள காரணியாக மாறியுள்ளது. இப்பற்றாக்குறையினை பூரணப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக அமைச்சிற்கும் உரிய சேவை சபைக்கும் தெரியப்படுத்தப்பட்டது. | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர்களின் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |